Bridge across Paruthivakkal.

* 138 *Q.*—Thiru J. JAMES : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is a proposal for the widening and for the reconstruction of the bridge across Paruthivakkal on the Samiyar-madam-Mecode road in Kanyakumari district;

(*b*) whether estimate has been prepared; and

(*c*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) & (இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த பாலத்தை விரிவு படுத்துவதற்கானத் தேவையை உணர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அதிகாரிகள் வந்து பார்வையிட்டார்கள். உடனடியாக விரிவுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறிச் சென்றார்கள். ஆனால் இதுவரை தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படாமல் இருப்பதற்கு காரணமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தக் குறிப்பிட்டத் திட்டத்தை நிறைவேற்ற ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் இன்னமும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

Coffee crops.

* 139 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agrculture be pleased to state—

(*a*) whether the Coffee Estates have registered a bumper crop in 1971; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) ஆம்.

1972 ஆகஸ்ட் 17]

(இ) 1971 அக்டோபர் இறுதி வரையில் 1970–71 காப்பிப் பருவகாலத்தில் பயிரிடப்பட்ட காப்பியில் 1,09,425 டன் காப்பித் தொகுப்பில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது வரையில் சேர்ப்பிக்கப் பட்ட காப்பியின் அளவில் இதுவே மிக அதிகமானதாகும். இதில் 58,136 டன் அராபிக்கா வகையும், 51,289 டன் ரொபஸ்டா வகையும் அடங்கும். முந்திய ஆண்டின், அதாவது 1969–70-ம் ஆண்டில் உற்பத்தி அளவாகிய சுமார் 63,000 டன்னுடன் ஒப்பிடுங்கால், 1970–71-ல் 73.69 சதவீதம் உற்பத்தி பெருகியுள்ளது. காப்பி பயிரிடுவோர், மும்முரமாகச் சாகுபடியை மேற்கொண்டதே அமோக விளைச்சலுக்குக் காரணமாகும். மேலும் வாரியத்தின் ஆராய்ச்சிப் பிரிவு வேளாண்மையில் புதிய வகைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்ததும் பருவ நிலைகளும் சாதகமாக அமைந்ததும் விளைச்சல் பெருகியதற்குக் காரணமாகும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு காப்பித் தோட்டங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றனவா ? இல்லையெனில், அவற்றை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கன்னியாகுமரி மாவட்டத்தில் காப்பி தோட்டங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றன. இதுவரையிலே 4,251 டன் அங்கே உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

சிறுகமணி கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை.

* 140 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சிராப்பள்ளி வட்டம், சிறுகமணி கிராமத்தில் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை எப்போது முதல் செயல்பட்டு வருகிறது?

(இ) பண்ணைக்குச் சொந்தமாக எவ்வளவு ஏக்கர் நிலமுள்ளது?

(உ) இதுநாள் வரை புதிய கரும்பு ரகம் ஏதேனும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) 1960-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது.